**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், பழனி.**

**முன்னிலை: செல்வி. S. அபூர்வா, B.A., L.L.B.,**

**மாவட்ட உரிமையியல் நீதிபதி, பழனி.**

**2025–ம் ஆண்டு ஏப்ரல் மாதம், 17–ஆம் தேதி, வியாழக்கிழமை**

**இ.ம.எண்.11/2024**

in

**அ.வ.எண்.14/2019**

1. திண்டுக்கல் மாவட்டம், பழனி வட்டம், அய்யம்புள்ளி கிராமம், வரதமாநதி அஞ்சல், புளியமரத்து செட் தோட்டத்துசாலையில் வசிக்கும், லேட்.மகேந்திரன் மனைவி சுமார் 42 வயதுள்ள M.மகேஸ்வரி.

2.திண்டுக்கல் மாவட்டம், பழனி வட்டம், அய்யம்புள்ளி கிராமம், வரதமாநதி அஞ்சல், புளியமரத்து செட் தோட்டத்துசாலையில் வசிக்கும், லேட்.மகேந்திரன் மகன் சுமார் 22 வயதுள்ள M.வினேஷ்.

3.திண்டுக்கல் மாவட்டம், பழனி வட்டம், அய்யம்புள்ளி கிராமம், வரதமாநதி அஞ்சல், புளியமரத்து செட் தோட்டத்துசாலையில் வசிக்கும், லேட்.மகேந்திரன் மகள் சுமார் 20 வயதுள்ள M.ரோகினி. ––– மனுதாரர்கள்/பிரதிவாதிகள்

/எதிர்/

1.திண்டுக்கல் மாவட்டம், பழனி வட்டம், அய்யம்புள்ளி கிராமம், வரதமாநதி அஞ்சல், புளியமரத்து செட் தோட்டத்துசாலையில் வசிக்கும், லேட்.பொன்னப்ப நாடார் மகன் சுமார் 61 வயதுள்ள ஈஸ்வரன். –––– 1ம்எதிர்மனுதாரர்/வாதி

2.திண்டுக்கல் மாவட்டம், கொடைக்கானல் வட்டம், ராஜுவ்நகர், தோட்டத்தில் குடியிருக்கும் லேட்.பொன்னப்பநாடார் மனைவி சுமார் 79 வயதுள்ள காளியம்மாள்(இறப்பு) –––– 2ம் எதிர்மனுதாரர்/5ம் பிரதிவாதி

வழக்கு சொத்தான கிணற்றுக்கு மேற்கு பக்கம் உள்ள சோலார் வேலி அகற்றப்பட்டுள்ளதை நீதிமன்ற ஆணையர் மூலமாக பார்வையிட்டு, அறிக்கை தாக்கல் செய்ய வேண்டி உரிமையியல் நடைமுறை சட்டக் கட்டளை **26 விதி 9–ன்** கீழ் மனுதாரரால் இந்த மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

.

| | | |
|---|---|---|
| மனு தாக்கல் செய்த நாள் | – | 29.11.2024 |
| மனு கோப்பிற்கு எடுக்கப்பட்ட நாள் | – | 06.12.2024 |

இந்த மனுவானது கடந்த 03.04.2025 ஆம் தேதி இறுதி விசாரணைக்காக வந்தபோது, மனுதாரர் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் **திரு.G.பாஸ்கரன்** அவர்கள் முன்னிலையாகியும், எதிர்மனுதார்கள் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் **திரு.T.இராஜமாணிக்கம்,B.A.,L.L.B.,** அவர்கள் முன்னிலையாகியும், இருதரப்பு வாதங்கள் கேட்கப்பட்டும், மனு ஆவணங்கள் பரிசீலிக்கப்பட்டும், நாளது தேதி வரை இந்த நீதிமன்றத்தின் பரிசீலனையில் இருந்து வந்து உத்தரவாணை பிறப்பிக்கும்.

## உத்தரவாணை

1. முடிவாக இம்மனு தள்ளுபடி செய்து உத்தரவிடப்படுகிறது.
2. மனுவின் தன்மையை கருத்திற் கொண்டு செலவுத் தொகையை தரப்பினர்களே ஏற்கவும் உத்தரவிடப்படுகிறது.

## சொத்து விபரம்

திண்டுக்கல் மாவட்டம், பழனிவட்டம், அய்யம்புள்ளி கிராமம், சர்வே எண்.825/7 நம்பரில் வடகிழக்குப்பக்கம் ஈசானி மூலையில் செ 03 க்கு ஹெக்.0.01.4 உள்ள நிலமும் அதில் அமைந்த கிணர் ஒன்றிலும், அதில் பொருத்தப்பட்டதும், மின் இணைப்பு எண்.349 உள்ள 3 ஹெச்.பி எலெக்ட்ரிக் மோட்டார் பம்பு செட் வகையறாவிலும் பொதுவில் 5-ல் 1 பாக பாத்தியமும், அதன் தண்ணீர் துலை தொட்டி உத்தி வாரி

வாய்க்கால் வகையறா ஜலதார பாத்தியங்களும். என் நிலத்தின் வழியாக ஷை கிணற்றுக்கு வாதி போய் வரும் பாதை பாத்தியமும் என் நிலத்தில் பூமிக்கடியில் தற்போது நிலையில் பதிக்கப்பட்டுள்ள குழாய் மூலமாக கிணற்று தண்ணீரை கிரைய சொத்துக்கு தண்ணீர் பாய்ச்சிக்கொள்ளும் பாத்தியமும் சேர்ந்து. மேற்படி சொத்து விவரம் தற்பொழுதைய சர்வே உட்பிரிவின்படி சர்வே எண்.825/7 பில் ஹெக்.0.01.50 ஏர்ஸ்.

2025 ஆம் வருடம் ஏப்ரல் மாதம் 17 ஆம் நாளிட்ட உத்தரவாணையில் என்னால் கையொப்பமிடப்பட்டு இந்நீதிமன்ற முத்திரையுடன் வழங்கப்பட்டது.

ஒம்/– S.அபூர்வா,
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
பழனி.